திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கைதிகளுக்குக் காலையிலே எந்தமாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, நடுப்பகலிலே எந்தமாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, சாயங்காலம் எந்த மாதிரியான உணவு கொடுக்கப்படுகிறது, இரவில் எப்படிப்பட்ட உணவு கொடுக்கப்படுகிறது, எந்தெந்த வகையிலே கொடுக்கப்படுகிறது என்பதை அரசு தெரிவிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காலையிலே, நான் முதலில் வாசித்தபடி, ஏற்கனவே கஞ்சி கொடுத்து வந்தார்கள். அந்தக் கஞ்சியை உப்புமா, இட்டிலி என்ற முறையில் மாற்றிக் கொடுக்கலாமா என்று பரீட்சார்த்தமான முறை இப்பொழுது பின்பற்றப்படுகிறது. மதியத்திலே சோறு, களி, கோதுமைக்களி கொடுக்கிறார்கள். இரவிலே அதிலே ஓரளவிற்குப் போடப்படுகிறது.

Vigilance Cell in High Court.

* 163 *Q*.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Vigilance Cell has been set up in the High Court; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நீதித்துறை அதிகாரிகள், பணியாளர்கள் மீது சாட்டப்பட்ட லஞ்சக் குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கைகள் எடுப்பதற்காக, சென்னை, உயர்நீதிமன்றத்தில் ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு ஒன்று அமைப்பதற்கு 1965, மே திங்களில் அரசு ஒப்பளித்தது. இந்த ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு, மாவட்ட செஷன்ஸ் நீதிபதியின் தரத்தில் உள்ள தனி அதிகாரி ஒருவரின் பொறுப்பில் உள்ளது. புகார்கள் குறித்துப் புலன் ஆய்வு செய்வதில் இத் தனி அதிகாரிக்கு காவல்துறையிலிருந்து அனுப்பப்படும் முறையான காவல்துறைப் பணியாளர்கள் உதவுகின்றனர். உயர்நீதிமன்ற, ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்றாக நான்கு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும், காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமைக் காவலர் ஒருவர், காவலர் ஒருவர் ஆகியோரைக் கொண்டுள்ளது. இந்த நான்கு பிரிவுகளுக்கும் பொதுவாக காவல்துறை டெபுடி சூப்பிரின்டெண்டெண்ட் ஒருவர் தலைமை அதிகாரியாக உள்ளார். இவர் ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவின் தலைமையிடமாகிய சென்னையில் உள்ளார். துப்புகளையும், புலன்களையும் முனைப்பாகச் சேகரிக்கும் பொருட்டு, மேலும் ஒரு காவல்துறை டெபுடி சூப்பிரின்டெண்டெண்ட் சிறப்பு உதவியாளர் ஒருவர் 4 காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், 4 தலைமைக் காவலர்கள், 6 காவலர்கள் ஆகியோரை நியமிக்க அரசு அண்மையில் ஒப்பளித்தது.

Thiru R. PONNAPPA NADAR : Mr. Speaker, Sir, is there any proposal to extend the Cell to all the District Head-quarters?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை அலுவலகம் இருக்கிறது. எங்கெங்கு அந்த வேலையிருக்கிறதோ அங்கேயெல்லாம் போலீஸ் அதிகாரிகள் கண்காணித்து முடிவிலே உயர்நீதிமன்ற அளவிலேதான் முடிவெடுக்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி கண்காணிப்பதன் மூலம் அந்த ஊழியர்கள் மேல் பல நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பிறகு கூட அவர்கள் மேல் எப்போதும் கேஸ் இருந்தால் குறைந்த பட்ச தண்டனையே 2 வருஷம் இருக்கிறதே, அதை மாற்ற ஏதாவது முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தண்டனைப் பொறுத்தவரையில் எல்லோருக்கும் பொதுச்சட்டம் இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்றங்கள் நிர்ணயிக்கின்றன. அந்தச் சட்டத்தில் மாறுதல் செய்ய வேண்டுமென்று நினைத்தால்தான் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister the number of cases that have been taken up by this Cell and the number of cases disposed of by them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றித் தகவல் இல்லை.

Petitions from employees of Tamil Nadu Record Office

*166 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be please to state—

(a) whether petitions dated 22nd May 1970 and 3rd June 1970 have been received by the Government from employees of hte Tamil Nadu Record Officer;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சார்பு நிலைப் பணியாளர்களைத் துன்புறுத்தவதாகவும், நிரப்பப்படாத பதவிகளில் பணியாளர்களை நியமனம் செய்வதில் முறை கேடாக நடப்பதாகவும், அரசு ஜீப், பொதுப்பணம், அவருடைய அதிகாரங்கள் ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும், ஆவணக் காப்பக இயக்குநரின் மேல், அந்த முறையீடுகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்தன.

(உ) அரசுச் செயலர் ஒருவர் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டு, அவரின் பரிந்துரைகளுக்கு ஏற்ப, இயக்குநரால் அவருடைய பணியாளர்களின் மீது சுமத்தப்பட்ட தண்டனைகள் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் சில குற்றச்சாட்டுக்கள், குறித்து விசாரணை அதிகாரியின் பரிந்துரைக்கு ஏற்ப, இயக்குநர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.